# 21-10-2024 செய்தி

## ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர பிரதிநிதித்துவம்

- 1945-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்த கவுன்சில், தற்கால தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இல்லாததுடன், புவி அரசியல் யதார்த்தங்களை பிரதிபலிக்கவில்லை என்று இந்தியா விமர்சித்து வருகிறது.
- இந்நிலையில், ரஷிய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் கூறியதாக அந்நாட்டு ஊடகத்தில் வெளியிடப்பட்ட செய்தியில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்தது.
- இந்தியா, பிரேஸில் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு நீண்ட காலமாக நிரந்தர பிரதிநிதித்துவம் இருந்திருக்க வேண்டும்.
- இது உலகில் உள்ள பெரும்பான்மை நாடுகளின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார்.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராகும் இந்தியாவின் முயற்சிக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பிரிட்டன் பிரதமர் கியெர் ஸ்டார்மர் பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் ஆகியோர் ஆதரவு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பாவுடன் இணைந்து இஸ்ரோ திட்டம்: செயற்கை சூரிய கிரகணத்தை உருவாக்கும் புரோபா –3 செயற்கைக்கோள்

**ஐரோப்பிய விண்வெளி நிறுவனம்**

- விண்வெளித்துறையில் ஈடுபட்டுள்ள 18 உறுப்பு நாடுகளை கொண்ட ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (இ.எஸ்.ஏ) பிரான்ஸ் தலைநகர் பாரீஸ் நகரில் உள்ளது.
- சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு மனிதர்களை அனுப்புவது, கோள்கள் மற்றும் நிலவு, ஏனைய விண்பொருட்களுக்கு ஆளில்லா விண்கலங்களை அனுப்புதல், பூமியை ஆராய்தல், தொலைதொடர்பு உள்ளிட்ட பல்வேறு விண்வெளி ஆய்வுகளில் ஈடுபட்டு வருகிறது.

**'புரோபா-3' செயற்கைக்கோள்**

- ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் (ஏ.எஸ்.ஏ), இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன் (இஸ்ரோ) இணைந்து, விண்வெளியில் செயற்கை சூரிய கிரகணத்தை உருவாக்க 'புரோபா -3' என்ற இரட்டை செயற்கைக்கோளை வடிவமைத்து உள்ளது.

**சூரியனின் கொரோனா**

- ஒன்று சூரியனின் வட்டை தடுக்கவும். மற்றொன்றில் நிழலை வீசுகிறது. இந்த இரட்டை செயற்கைக்கோள் பணி செயற்கை சூரிய கிரகணத்தை உருவாக்க வடிவமைக்கப்பட்டு உள்ளது.
- அதிக நீள்வட்ட சுற்றுப்பாதையை இந்த செயற்கைக்கோள் கொண்டிருக்கும். இந்த தொழில்நுட்பம் சூரியனின் கொரோனாவை நீண்ட நேரம் கண்காணிக்க முடியும்.

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகாராஷ்டிராவின் கோட்டைகள்

- இந்த கோட்டையை மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜி கட்டினார். சிந்துதுர்க் மாவட்டம், மால்வான் நகரின் கடற்கரையில் இது அமைந்துள்ளது.

**முருட் ஜன்ஜிரா:**

- அரபி கடலில் உள்ள ஒரு தீவில் இந்த வரலாற்று கோட்டை அமைந்துள்ளது. முகலாயர், போர்த்துகீசியர்களின் படையெடுப்பு முயற்சிகளை தடுப்பதில் இது முக்கிய பங்கு வகித்தது.

**விஜயதுர்க்:**

- சிந்துதுர்க் மாவட்டம், தேவ்கட் தாலுகாவில் உள்ள விஜயதுர்க்கின் தீபகற்பப் பகுதியின் முனையில் அமைந்துள்ளது.

**சிவ்னேரி:**

- புனே மாவட்டத்தில் ஜுன்னாருக்கு அருகில் அமைந்துள்ள ராணுவக் கோட்டை, இது மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜி பிறந்த இடம்.

**ராய்காட்:**

- ராய்காட் மாவட்டம், மஹாட்டில் அமைந்துள்ள ஒரு மலைக்கோட்டை, சத்ரபதி சிவாஜி, இந்தக் கோட்டையைப் புதுப்பித்து கி.பி. 1674ல் தனது தலைநகராக மாற்றினார்.
- தரையிலிருந்து சில நிமிடங்களில் கோட்டையை அடைய கயிறு வழி வசதி உள்ளது.

**சின்ஹாகாட்:**

- புனேவுக்கு அருகில் உள்ள இது கொண்டாணா என்றும் அழைக்கப்படுகிறது. இதற்கு சிங்கத்தின் கோட்டை என்று பொருள்.

**லோஹா காட்:**

- மகாராஷ்டிராவின் மிக பழமையான கோட்டை இது. இதில் ஏராளமான குகைகள் உள்ளன. மலையேற்ற சாகசங்களில் ஈடுபடும் வீரர்கள். சுற்றுலா பயணிகள் இங்கு வருகிறார்கள்.
- சத்ரபதி சிவாஜி மகாராஜ் மற்றும் மராட்டிய மன்னர்கள் 350க்கும் மேற்பட்ட கோட்டைகளை கட்டியுள்ளனர்.